தலைக்கானிகுப்பத்தில் புதிய ஏரி

*438 வினா—திரு. ந. முத்துவேல்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியில் தலைக்கானிகுப்பம் கிராமத்தில் புதிய ஏரி கட்டுவதற்காக அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) ஆம். ரூ. 1-05 லட்சத்திற்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

Vermiculite deposits in Thiruppathur

*439 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state the progress made so far in the implementation of the scheme taken up by the Geology Branch formed under Industries and Commerce Department for mining and processing of Vermiculite in Tiruppathur taluk in North Arcot district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1972 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சுரங்கத்தில் முறையான உற்பத்தி தொடங்கப் பெற்று சுமார் 800 டன் நீர் அபிரகப்படிவம் வெட்டியெடுக்கப்பட்டு தரம் வாரியாகப் பிரித்து சேர்த்து வைக்கப்பட்டுள்ளது. நீர் அபிரகப்பட்டைத் தொழிற்சாலை, அதற்கு வேண்டிய எல்லா இயந்திரங்களுடன் 1973-ம் ஆண்டு மத்தியில் அம்பத்தூரில் நிறுவப்பட்டது. இத்தொழிற்சாலையில் மாதிரி ஓட்டம் நடத்தியதில், ஊக்கமளிப்பதாக இருக்கிறது. இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு ஒரு டன் நீர் அபிரகப்பட்டை தயாரிக்குமளவிற்கு தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: இதை விற்பதன் காரணமாக நமக்கு உத்தேசமாக எவ்வளவு வருமானம் வரும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: உத்தேச வருமானம் எவ்வளவு என்ற விவரம் இல்லை. இது புதிய விதமான கண்டுபிடிப்பு—இதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிற அளவுக்கு வரவில்லை.

1975 மார்ச் 24]

Since this is a new type of mineral and as its different uses were not earlier experimented upon by private agencies, they have not come forward to buy the exfoliated vermiculite in large quantities. However, the Geology branch has been making enough publicity by way of distributing pamphlets and samples of exfoliated vermiculite to interested enterpreneurs. About 12 tonnes of exfoliated vermiculite has been manufactured and sold to Tamil Nadu Small Industries Corporation, I.C.F. of Southern Railway and to private firms on demand.

இதைக் கொண்டு insulation Boards, tiles, partition walls ஆகியவை செய்யலாம் என்று சொல்லப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : இந்தத் தாதுப்பொருளை வெட்டுவதற்கு எவ்வளவு மூலதனம் ஒதுக்கப்பட்டுள்ளது? இது அரசாங்கத் துறையில் செய்யப்படுகிறதா? தனியார் துறையில் செய்யப் படுகிறதா? மொத்தம் எவ்வளவு எடுக்கலாம் என்று கணக்கிடப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னிடத்தில் இருக்கிற குறிப்பின்படி வடாற்காடு மாவட்டத்தில் சேவத்தூர் என்ற இடத்தில் 60 எக்கராவில் இதுபோன்ற கனிப்பொருள் எடுக்கப்படுகிறது. அங்கே 3 லட்சம் டன் கனிவளம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதற்காக மூனேமுக்கால் லட்சம் ரூபாய் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Survey on granite deposits

* 440 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :

(a) whether it is proposed to undertake a Geological Survey in the districts of Dharmapuri, North Arcot, South Arcot and Salem to find out the availability of Black Granites; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) தொழில் வணிகத்துறையைச் சேர்ந்த மாநில புவியியல் பிரிவு தருமபுரி, சேலம், வடாற்காடு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங் களில் புவியியல் ஆய்வினை மேற்கொண்டது. தருமபுரி, சேலம், தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் இவ்வாய்வு முடிவடைந் துள்ளது. வடாற்காடு மாவட்டத்தில் ஆய்வு நடந்தேறி வருகிறது.